**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

அ.வ.எண்.69/2020

பெயர் – சரவணன்(வா.சா.1)

நாள் – 08.09.2025

**6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1) சக்கணத்தேவர், மாயக்காள் தம்பதினருக்கு தனுஷ்கோடி, தர்மலிங்கம், கணபதி, தனலட்சுமி, மரகதம், லோகமுத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி கூறப்பட்ட தனுஷ்கோடி AV மேல்நிலை பள்ளியில் ஆசியராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். கணபதி என்பவர் மானாமதுரையில் வசித்து வந்தார் என்றால் சரிதான். சக்கணத்தேவரின் 2 வது மனைவி மீனம்மாள் என்றால் சரிதான். சக்கணத்தேவர், மீனம்மாள் தம்பதினருக்கு நவநீதகிருஷ்ணன், ருக்மணி, திருஞானசம்மந்தமூர்த்தி ஆகியோர்கள் வாரிசு என்றால் சரிதான். மேற்படி திருஞானசம்மந்தமூர்த்தி என்பவர் எங்கு வைத்து இறந்தார் என்றால் வெளிநாட்டில் வைத்தே இறந்துவிட்டார்.

2) வா.சா.ஆ.1 ஆவணத்தில் சக்கணத்தேவரின் மகன் சிதம்பர தேவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சி வா.சா.ஆ.1–ஐ படித்து காண்பித்தார், அதில் சக்கணத்தேவரின் மகன் சிதம்பர தேவர் என்று உள்ளதை தவறு என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி கூறப்பட்ட சிதம்பரதேவர் குறித்து எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிதம்பரதேவரின் பெயரை வா.சா.ஆ.1 லிருந்து நீக்குவதற்கு நான் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் அப்படி ஒரு பெயர் இருப்பதே எனக்கு தெரியாது. சிதம்பரதேவரை இந்த வழக்கில் நான் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3) வழக்கு சொத்தானது கூட்டாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடுகையில் அதற்குரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.8 ஆன கிரைய ஆவணத்தில் பக்கம் 3–ல் "சக்கணத்தேவர் காலம் சென்ற பின்பு ஷை யாருக்குகுரிய பாகம் எங்களுக்கு வாரிசு முறைப்படி எங்கள் பாகத்திற்கு கிடைத்து நாங்கள் ஆண்டு அனுபவித்து வரும் என்று" குறிப்பிட்டுள்ளதா என்றால் அது தவறான சங்கதி ஆகும். வா.சா.ஆ.8–ல் 1 வது

சாட்சியாக கையொப்பம் போட்டவர் தனுஷ்கோடி என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் அவர் உயிருடன் இல்லை. தனுஷ்கோடி ராமசாமி எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இருக்கும். அவரது இறப்பு சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) வா.சா.ஆ.3–ல் சர்வே எண்.594/4 ஆனது சக்கணத்தேவர் மகன் தர்மலிங்கம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன சர்வே எண்.589/5–ல் சக்கணத்தேவர் மனைவி மாயக்காள், சக்கணத்தேவர் மகன் நவநீதகிருஷ்ணன் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் பெரியபெருமாள் மனைவி தனலட்சுமி என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது தவறான சங்கதியாகும். வா.சா.ஆ.4 ஆவணமானது தவறான என்றால் அந்த பட்டா தவறு என்பதற்கே தாக்கல் செய்துள்ளேன்.

5) வா.சா.ஆ.5 ஆவணத்தில் சக்கணத்தேவர் மனைவி மாயக்காள் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வா.சா.ஆ.2, வா.சா.ஆ.4 ஆகியவை தவறான ஆவணங்கள் என்று குறிப்பிடுகையில் அந்த பட்டாகளை ரத்து செய்வதற்கு முயற்சி எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து யார் அனுபவத்தில் இருக்கறிது என்பது குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு சொத்து கூட்டான அனுபவத்தில் இருக்கிறது.

6) 1 முதல் 8 அயிட்ட சொத்துக்களையும் 6–ம் பிரதிவாதி லோகமுத்துகிருஷ்ணன் தீர்வை வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்டு தனி பட்டாக்கள் பெற்று தனி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. நான் கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.